**IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, SALEM.**

**S.C.No.138/2013**

Date: 27.02.2024.

**PW–5: பிரகாஷ்**

சாட்சி இன்று மீண்டும் மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு எதிரிகள் 1, 2, 5, 7, 9, 11, 14 முதல் 18 தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

**A1 to A3, A5, A6, A7, A9, A13, A14 to A18 present. A8 and A11 called absent. Petition u.sec.317 Cr.P.C filed and allowed.**

**1, 2, 5, 7, 9, 11, 14 முதல் 18 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் MBA படித்திருக்கிறேன். தற்போது காட்டுமன்னார்குடியில் வேலை செய்கிறேன். 2014 ஆம் ஆண்டு MBA படித்து முடித்தேன். போலிசார் என்னை விசாரித்தபோது நான் படித்து கொண்டிருக்கும் சங்கதியை சொன்னேன். காசிநாதன் வெட்டப்பட்டு கிடந்தார் என்று நான் போலிசார் விசாரணையில் சொன்னேனா என்றால் காசிநாதன் வெட்டப்பட்டதை நான் நேரில் பார்த்தேன். காசிநாதன் வெட்டப்பட்டதை நான் நேரில் பார்த்ததாக பொய்யாக சொல்லுகிறேன் என்றாலும், அப்படி எந்த சம்பவத்தையும் நான் பார்க்கவில்லை என்றாலும் சரியல்ல.

போலிசார் விசாரணையில் நான் காசிநாதன் வெட்டப்பட்டு கிடந்தார் என்று நான் சொல்லவில்லை. இறந்துபோன பிரபு எனது மூத்த சகோதரர் என்ற சங்கதியை நான் போலிசார் விசாரணையில் சொல்லியிருக்கிறேன். போலிசார் என்னை இந்த வழக்கு தொடர்பாக எப்போதும் விசாரணை செய்யவில்லை என்றாலும், அப்படி விசாரித்திருந்தால் பிரபு எனது மூத்த சகோதரர் என்ற சங்கதியை நான் போலிசார் விசாரணையில் சொல்லியிருப்பேன் என்றாலும் சரியல்ல.

கடலூர் மாவட்டம் தரசூர் என்ற கிராமத்தில் எனது தாய்மாமா வீடு இருக்கிறது என்றால் சரிதான். நான் தரசூர் கிராமத்தில் உள்ள எனது தாய்மாமா வீட்டிலிருந்து தான் எனது பள்ளி, கல்லூரி படிப்புகளை படித்தேன் என்றால் சரியல்ல. வங்குடியில் இருந்து தான் படித்தேன்.

போலிசார் என்னை விசாரித்தபோது சம்பவத்தின் போது நாங்கள் மதியழகன் வீட்டு வாசலில் நின்று பேசிகொண்டிருந்ததாக சொல்லியிருக்கிறேன். போலிசார் விசாரணையில் பிரபுவை பற்றி நான் சொல்லும் போது பாரிவள்ளல் மகன் பிரபு என்று குறிப்பிட்டு சொல்லியிருக்கிறேன்.

இவ்வழக்கு சம்பவ சமயத்திலும், சம்பவ தினத்தன்றும் நான் தரிசூர் கிராமத்தில் தங்கியிருந்து படித்து வந்தேன் என்றாலும், சம்பவதினத்தன்று நான் வங்குடி கிராமத்தில் இல்லை என்றாலும், சம்பவம் எதனையும் நான் நேரில் பார்க்கவில்லை என்றாலும், என்னை போலிசார் விசாரணை செய்யவே இல்லை என்றாலும், போலிசார் சொல்லிகொடுத்து வழக்கு சம்பவத்தை நான் மதியழகன் வீட்டு வாசலில் நின்று பார்த்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

நான் முதல்விசாரணையில் சொல்லியுள்ளதுபோல் எந்த ஒரு சம்பவமும் நான் சொன்ன நாள், நேரம், இடத்தில் வைத்து நடைபெறவில்லை என்றாலும், எந்த சம்பவத்தையும் நான் பார்க்கவில்லை என்றாலும், போலிசார் சொல்லிக்கொடுத்து பார்க்காத சம்பவத்தை பார்த்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. உண்மையிலேயே போலிசார் என்னை விசாரித்திருந்தால் எனது வாக்குமூலத்தில் பிரபுவை பற்றி குறிப்பிடும் போது பாரிவள்ளல் மகன் பிரபு என்று பதிவு செய்திருப்பதற்கு வாய்ப்பேயில்லை என்றாலும், போலிசார் என்னை விசாரணை செய்யாமலே எனது வாக்குமூலத்தை தயார் செய்திருக்கிறார்கள் என்றாலும் சரியல்ல.

போலிசார் விசாரணையில் நான் எதிரி ராஜதுரை மகாலிங்கத்தை கழுத்தில் பட்டாகத்தியால் ஒரே வெட்டாக வெட்டிவிட்டார் என்று சொல்லியிருக்கிறேன். நான் போலிசார் சொல்லிகொடுத்து பொய் சாட்சி சொல்லுகிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Sd/- G. Sri Rama Jeyam,
III Additional District Judge,
Salem.